23 NOV 2013
மைலாப்பூர்
CHENNAI 600 005
நில நிர்வாகத் துறை

பொருள்

நிலம் – வீட்டுமனை ஒப்படை – அரசு நிலங்களில் வீடுகள் கட்டி குடியிருப்போரின் ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து வீட்டுமனைப்பட்டா வழங்கும் சிறப்புத் திட்டம் 31.03.2013 உடன் முடிவடைந்தது – மேலும் ஓராண்டுக் காலத்திற்கு 30.03.2013 வரை நீட்டிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

வருவாய் (நிலம்2) துறை

F1/24458/2011

அரசாணை (நிலை) எண்.142 113694

நாள்: 23.05.2013
விஜய வருடம், வைகாசி–9
திருவள்ளுவர் ஆண்டு 2044.

படிக்கவும்:

1. அரசாணை (நிலை) எண்.854, வருவாய்த் துறை, நாள்: 30.12.2006.
2. அரசாணை (நிலை) எண்.498, வருவாய்த் துறை, நாள்: 05.09.2007.
3. அரசாணை (2டி) எண்.711, வருவாய்த் துறை, நாள்: 30.11.2007.
4. அரசாணை (நிலை) எண்.34, வருவாய்த் துறை, நாள்: 23.01.2008.
5. அரசாணை (நிலை) எண்.241, வருவாய்த் துறை, நாள்: 09.05.2008.
6. அரசாணை (நிலை) எண்.579, வருவாய்த் துறை, நாள்: 03.10.2008.
7. அரசாணை (நிலை) எண்.366, வருவாய்த் துறை, நாள்: 08.10.2009.
8. அரசாணை (நிலை) எண்.43, வருவாய்த் துறை, நாள்: 29.01.2010.
9. அரசாணை (நிலை) எண்.482, வருவாய்த் துறை, நாள்: 28.09.2010.
10. அரசாணை (நிலை) எண்.172, வருவாய்த் துறை, நாள்: 23.05.2012.
11. முதன்மைச் செயலாளர்/நில நிருவாக ஆணையர் கடித எண்.எப்1/24458/2011, நாள் 30.10.2012.
12. அரசாணை (நிலை) எண்.97, வருவாய்த் துறை, நாள்: 27.03.2013.
13. கூடுதல் தலைமைச் செயலர், வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் நில நிருவாக ஆணையர்(டெ) அவர்களின் கடித எண்.எப்1/24458/2011, நாள் 04.04.2013.
14. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் 2013–2014ஆம் ஆண்டின் வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின் போதான அறிவிப்பு.

******

ஆணை:

அரசு புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி குடியிருப்போருக்கு, அவர்களது ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து, வீட்டுமனைப்பட்டா வழங்கும் சிறப்புத் திட்டம் பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்டது. இச்சிறப்பு திட்டத்தின் கீழ், அரசு புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களை சமர்ப்பித்தவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அளித்திருந்த பரிந்துரைகளை பரிசீலித்து தகுதி அடிப்படையில் மன்றங்களின் தீர்மானங்களைப் பெற்று, அந்நிலங்கள் அரசுக்கு தேவையில்லை எனில் வீட்டுமனைப் பட்டா வழங்கி வரன்முறைப்படுத்த ஆணையிடப்பட்டது. இதற்கென செயல்பாட்டிலிருந்த பல தடையாணைகள் நீக்கு செய்யப்பட்டன.

Verified by Tamil Nadu e-Governance Agency TM

2. இத்திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தும் பொருட்டு, பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. மேலும் பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் இலவச ஒப்படை பெறுவதற்கான வருமான உச்சவரம்பு நீக்கப்பட்டும், ஊரகப் பகுதிகளில் 3 சென்ட், நகராட்சிப் பகுதிகளில் 1½ சென்ட் மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் 1 சென்ட் என்று இருந்த வரம்பை இத்திட்டத்திற்கு மட்டும் உயர்த்தி, ஊரகப் பகுதிகளில் 4 சென்ட், நகராட்சி பகுதிகளில் 2½ சென்ட் மற்றும் மாநகராட்சி பகுதிகளில் 2 சென்ட் சுற்றிய அளவில் வீட்டுமனைப்பட்டா வழங்கப்படும் என்றும், இத்திட்டத்தின் கீழ் முன்னதாக நிலக்கிரயம் செலுத்தி வீட்டுமனைப் பட்டா பெறுபவர்களுக்கு அவர்கள் செலுத்திய தொகை, வரிய ஆய்விற்குப் பின்னர், அவர்களுக்கு திருப்பமும் வழங்கப்படும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

3. பார்வை நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில், இத்திட்டம் அரசு நிலங்களில் ஐந்தாண்டுகளுக்கு மேல் வீடுகட்டி குடியிருப்பவர்களுக்கும் பொருந்தும் என ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அதிகளவில் பயனாளிகள் பயன் அடைய வேண்டும் என்பதற்காகவும், மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தவும் இத்திட்டம் பலமுறை நீட்டிக்கப்பட்டு மீண்டும் பார்வை ஏழில் படிக்கப்பட்ட அரசாணையில் 30.9.2010 வரை நீட்டிக்கப்பட்டது.

4. மேலும், அரசு புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி குடியிருப்போரின் குடியிருப்பு கால வரம்பை ஐந்தாண்டு காலமாக உள்ளதை மூன்று ஆண்டுகளாக குறைத்து பார்வை எட்டில் படிக்கப்பட்ட அரசாணையில் அரசு ஆணையிட்டது. இச்சூழ்நிலையில், சிவகாசி பகுதி வரிச் செலுத்துவோர் சங்கம் தொடர்ந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் நீதிமன்ற எண்.1,24,2010-ல் பார்வை எட்டில் படிக்கப்பட்ட அரசாணையில் குடியிருப்பு கால வரம்பை ஐந்தாண்டு காலத்திலிருந்து மூன்று ஆண்டுகளாக குறைத்து வெளியிட்ட அரசாணையை இந்த வழக்கு விசாரணை முடியும் வரை செயல்படுத்தக் கூடாது என உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவினை ரத்து செய்வதற்கு துணையாக அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அரசின் இலவச வீட்டுமனை வழங்கும் ஒரு முறை சிறப்புத் திட்டத்தின் கீழ் விடுபட்டுள்ள ஏழை எளிய மக்கள் பயன் அடையும் பொருட்டு அரசு நிலங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் வீடுகள் கட்டி குடியிருந்து வருபவர்களின் ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து வீட்டுமனைப் பட்டா வழங்கும் இந்த ஒரு முறை சிறப்புத் திட்டம் 1.10.2010 முதல் ஓர் ஆண்டு காலத்திற்கு அதாவது 30.9.2011 வரை நீட்டிப்பு செய்து பார்வை ஒன்பதில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இந்த ஒரு முறை சிறப்புத் திட்டம் 1.10.2011 முதல் ஓர் ஆண்டு காலத்திற்கு அதாவது 30.9.2012 வரை நீட்டிப்பு செய்து பார்வை பத்தில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. பார்வை பதினொன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மைச் செயலர் மற்றும் நில நிருவாக ஆணையர் கேட்டுக் கொண்டதற்கினங்க, இந்த ஒரு முறை சிறப்புத் திட்டத்தினை 1.10.2012 முதல் 31.03.2013 வரை மேலும் ஆறு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்தும், இத்திட்டத்தின் நோக்கம் பாதிக்கப்படாமல் தவிர்க்கும் பொருட்டு, 01.06.2007-க்கு முன் அரசு புறம்போக்கு நிலத்தில் குடியிருப்பு செய்து குடியிருந்து வருபவர்களின் ஆக்கிரமிப்புகளை மட்டும் வரன்முறை செய்யவும் பார்வை பன்னிரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

6. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் 2013-14 ஆம் ஆண்டின் வருவாய் துறை மானியக் கோரிக்கையின் போது 2013-2014-ஆம் நிதியாண்டில் 2

3

இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்று அறிவிப்பு வெளியிட்டுள்ளதன் அடிப்படையிலும் மற்றும் பார்வை பதினான்காவதில் படிக்கப்பட்ட கடிதத்தில், கூடுதல் தலைமைச் செயலர், வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர்(பொ) அவர்கள், பார்வை பதினைந்தில் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிட்டுள்ள வாரு ஆணைக் நிர்ணயித்த தில் மாவட்ட ஆட்சியர்கள் செயல்படுத்துவதற்கு தேவையான நிதியை 30.09.2013 முடிய மேலும் ஓரு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்து ஆணை வெளியிடுமாறு கோரியுள்ளார். மேற்படி கோரிக்கையை பரிசீலனை செய்து அரசின் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் ஒரு முறை சிறப்புத் திட்டத்தின் கீழ் விடுபட்டுள்ள ஏழை எளிய மக்கள் பயன் அடையும் வகையில் 01.06.2007-ற்கு முன்னர் அரசு நிலங்களில் வீடுகள் கட்டி குடியிருந்து வருபவர்களின் ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து வீட்டுமனைப் பட்டா வழங்கும் இந்த ஒரு முறை சிறப்புத் திட்டத்தினை அரசாணை (நிலை) எண்.354, வருவாய்த்துறை, நாள் 30.12.2006 மற்றும் அதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி வரன்முறை செய்து பட்டா வழங்குவதற்கு 01.04.2013 முதல் 30.09.2013 வரை மேலும் ஆறு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்து ஆணையிடப்படுகிறது.

7. இந்த அரசாணையின்படி உரிய நடவடிக்கை எடுக்குமாறு முதன்மைச் செயலர் / நில நிர்வாக ஆணையர் மற்றும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ராஜீவ் ரஞ்சன்,
முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலாளர்/நிர்வாக ஆணையர், சேப்பாக்கம்,
சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.

நகல்
அனைத்து துறை செயலாளர்கள், சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் தனிச்செயலாளர், சென்னை-9.
மாண்புமிகு துணைச்சபாநாயகர் அவர்களின் சிறப்பு உதவியாளர், சென்னை-9.

Verified Registrar

Verified RealEstate™